DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.54/2022**

Deposition of witness for Prosecution அ.சா.5

Name : கவிதா
Father/ Husband Name : கணேசன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கடந்த 07.12.2020-ம் தேதி காலை 10.00 மணியளவில் எதிரி வீட்டுற்கும் அ.சா.1 வீட்டிற்கும் முன்பாக நானும் அமுதவள்ளி, ராஜேஸ்வரி ஆகிய மூவரும் பேசிக் கொண்டு இருந்தோம். அப்போது சத்தம் கேட்டது. நாங்கள் போய் பார்த்தபோது எதிரியும் அவரது மகளும் அ.சா1யை அவரது முடியை பிடித்து அடித்துக் கொண்டு இருந்தார்கள்.

2. கீழே கிடந்த கல்லை எடுத்து எதிரி அ.சா.1 மீது எறிந்தார். அதில் அ.சா.1க்கு கை, காலில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அதன் பிறகு அ.சா.1 யை சாட்சி ராஜேஸ்வரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். மாலை போலீசார் வந்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் இல்லை, அங்கு தான் நின்று பேசிக் கொண்டு இருந்தேன். நான் நிர்மலா வீட்டில் இருந்து பேசிக் கொண்டிருந்தேனா என்றால் ராஜேஸ்வரி வீட்டில் பேசிக் கொண்டிருந்தேன். ராஜேஸ்வரி வீட்டிற்கும் நிர்மலா வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் இரண்டு வீட்டிற்கு இடையே ஒரு 5 அடி பாதை உள்ளது.

ராஜேஸ்வரி வீட்டிற்கும் நிர்மலா வீட்டிற்கும் இடையே காம்பவுண்டு சுவர் உள்ளதா என்றால் இல்லை. நான் ராஜேஸ்வரி மற்றும் அ.சா.1 ஆகியோர் எதிரியுடன் பேசிக் கொள்ள மாட்டோம் என்றால் சண்டைக்கு முன்பு பேசிக் கொண்டு இருந்தோம்.

2. நிர்மலா எனது உறவினர் இல்லை, ஒரே சமுதாயத்தை சார்ந்தவரும் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் அவர்கள் தான் முதலில் போனார்கள், நான் 1/2 மணி நேரம் கழித்து பின்னால் போனேன். நான் மருத்துவமனைக்கு செல்லும்பொழுது போலீசார் வந்து விசாரித்து முடித்துவிட்டார்களா என்றால் ஆமாம். என்னை போலீசார் மருத்துவமனையில் விசாரித்தார்களா என்றால் இல்லை, வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

3. போலீசார் என்னை மாலையில் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த தேதியில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் அ.சா1க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நான் அ.சா.1 மற்றும் ராஜேஸ்வரி மூவரும் எதிரியின் வீட்டிற்கு முன்பு குப்பையை கொட்டியதால் ஏற்பட்ட முன்விரோதத்தால் மூவரும் கூட்டு சேர்ந்து பொய்யான புகாரை அளித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்வதும் மருத்துவமனைக்கு செல்வதாக சொல்வதும் பொய்யன்றும் அவ்வாறு மருத்துவமனைக்கு சென்றிருந்தால் என்னையும் மருத்துவமனையில் வைத்து விசாரித்திருப்பார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.